# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.32 /2023

### அ.சா. 15 (LW 23 )

| பெயர் | திரு.ஜோதி முருகன் | தொழில் | காவல் ஆய்வாளர் |
|---|---|---|---|
| த/ பெயர் | | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | தேதி | 12.03.2026 |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 வது எதிரி ஆஜர் படுத்தப்பட்டார் 2 வது எதிரி ஆஜர்.

**மொழிபெயர்ப்பாளர் திரு. அரவிந்தன் முன்னிலையில் பின்வருமாறு சாட்சிகளின் விசாரணை நடத்தப்பட்டது.**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மதுரை மாநகரம் தீவிர குற்ற தடுப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.08.2022 அன்று வடமதுரை காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது அன்று காலை 10.00மணிக்கு சார்பு ஆய்வாளர் திருமதி. கிருஷ்ணவேணி என்பவர் நிலைய பொறுப்பிலிருந்த போது வேடசந்தூர் தாலுகா வேல்வார்கோட்டை அஞ்சல், முத்தனங்கோட்டையை சேர்ந்த ரகுவேல் மனைவி சாந்திசீலா என்பவர் நிலையம் வந்து கொடுத்த புகாரைப் பெற்றுக் கொண்டு சார்பு ஆய்வாளர் நிலைய குற்ற எண். 294/2022 இதச பிரிவு 302 இதச வாக வழக்கு பதிவு செய்துள்ளார். இவ்வழக்கினை நான் எனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 26.08.2022 அன்று 11.00மணிக்கு இவ்வழக்கின் சம்பவ இடமான காவேரி மில் காம்பவுண்டு சுவருக்கு மேற்கு பக்கமுள்ள காட்டுப்பகுதி அருகிலுள்ள முட்புதரில் கிடந்த இறந்த நபரின் பிரேதத்தை பார்வையிட்டு சாட்சிகளின் முன்னிலையில் மாதிரிவரைபடம் வரைந்தேன். என்னிடம் காட்டப்படும் மாதிரி வரைபடம் இதுதான். அந்த வரைபடம் **அ.த.சா.ஆ.12.** ஆகும். என்னிடம் காட்டப்படும் மகஜரை தயார் செய்தேன். அது ஏற்கனவே **அ.த.ச.ஆ.3.** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. இறந்த ராம்குமாரின் தலைப்பகுதியின் அருகில் இரத்தம் படிந்த உடைந்த கல் இருந்தது. சம்பவ இடத்தில் இரத்தம் படிந்தமண், இரத்தம் படியாத மண் ஆகியவற்றை சம்பவ இட சாட்சிகளான மோகன், செல்வம் முன்பு அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி **அ.த.ச.ஆ.2.** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதனை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம்– 91 **அ.த.சா.ஆ.13.** ஆகும். உடைந்த கல் , இரத்தம் படிந்தமண், இரத்தம் படியாத மண்

ஆகியவை ஏற்கனவே **சா.பொ.1. முதல் சா.பொ.3 ஆக** ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. சம்பவ இடத்தில் வைத்து இறந்து போன ராம்குமார் என்பவரின் பிரேதத்தை பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகளுக்கு சம்மன் சார்பு செய்து அவர்கள் முன்னிலையில் 12.30மணிக்கு பிரேத விசாரணை ஆரம்பித்து 14.30மணிக்கு பிரேத விசாரணை முடிக்கப்பட்டது. நான் மேற்கொண்ட பிரேத விசாரணை அறிக்கை இதுதான். அந்த அறிக்கை **அ.த.சா.ஆ.14.** ஆகும். அதன்பின்பு இறப்பின் உண்மையான காரணத்தை மருத்துவ ரீதியாக அறியும் பொருட்டு பிரேதத்தை பரிசோதனைக்கு திண்டுக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு பிரேதத்தை அனுப்பி வைத்தேன். பிரேத பரிசோதனைக்கு பிரேதத்தை ஆஜர் செய்ய வடமதுரை காவல்நிலைய தலைமை காவலர் 248.ராமகிருஷ்ணன் என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பினேன். அந்த வேண்டுகோள் கடிதம் **அ.த.ச.ஆ.4.** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தின் மீது வெட்டி எடுக்கப்பட்ட துணிகளான புளூ கலர் பேண்ட், மெருண் கலரில் சிமிண்டு கலர்கட்டம் போட்ட டவுசர் ஒன்று, ஆரஞ்சு கலரில் கை வைத்த பனியன் ஒன்று ஆகியவற்றை படிவம் 91- மூலம் கைப்பற்றினேன். ஆரஞ்சு கலரில் கை வைத்த பனியன் ஒன்று **சா.பொ.8.** ஆகும். புளூ கலர் பேண்ட் **சா.பொ.9**. ஆகும்., மெருண் கலரில் சிமிண்டு கலர்கட்டம் போட்ட டவுசர் ஒன்று **சா.பொ.10** ஆகும். அதை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.த.சா.ஆ.**15. ஆகும். அதன் பின்பு இதன் வழக்கின் எதிரிகளை தேடி வந்த நிலையில் 24.08.2022 அன்று இரவு 08.00மணிக்கு மூனான்டிபட்டியில் இறந்து போன ராம்குமார் உடன் பிரச்சனை செய்த ஹிந்திகாரர்களை அடையாளம் கண்ட மூனான்டிபட்டியில் கடை வைத்திருக்கும் சிபு என்பவருன் எதிரியை தேடி வரும் போது எங்களுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் 27.08.2022 அன்று காலை 07.00மணிக்கு வடமதுரை இபி ஆபிஸ் அருகே நின்று கொண்டிருந்த இவ்வழக்கின் எதிரிகளான 1. அனுபம்பௌரி, 2. மகாவீர் திபர், மேற்கு வங்காள மாநிலத்தை சேர்ந்த இருவரையும் சாட்சி அடையாளம் காட்ட அவர்களை கைது செய்து இருவரையும் காவல்நிலையம் கொண்டு வந்து அவர்களுக்கு ஹிந்தி மற்றும் வங்காள மொழி தெரியும் என்பதால் தங்கம்மாபட்டி சக்திசாய் பள்ளியில் ஹிந்தி ஆசிரியராக பணிபுரியும் திருமதி .சந்திரகுமாரி என்பவர் முன்னிலையில் மொழி பெயர்த்து ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான முத்துபாண்டி, ரகுவேல் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெற்று 1வது எதிரி அனுபம் பௌரி தானாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே **அ.த.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் அவர் தன்னை அழைத்துச் சென்றால் சம்பவத்தின் போது தான் அணிந்திருந்த உடைகளை பன்னாரி அம்மன் மில், யூனிட் -2, காலியிடத்தில் இருந்து எடுத்து ஆஜர் செய்த உடைகளை இரத்தக்கரை படிந்த கருப்பு வெள்ளை டிசைன் போட்ட அரைக்கை சட்டை, இரத்தம் படிந்த கருப்புகலர் லோயர் nike இரத்தக்கரை படிந்த டாக் புளூ கலர் லோயர் -1 , இரத்தக்கரை படிந்த வெள்ளை ஊதா புளூ மஞ்சள் கலர் பூ போட்ட அரைக்கை சட்டை ஆகியவற்றை சாட்சிகள் முன்பு அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி ஏற்கனவே **அ.த.சா.ஆ.**9. ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. கருப்பு வெள்ளை, டிசைன் போட்ட அரைக்கை சட்டை **சா.பொ.4** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. , இரத்தம் படிந்த கருப்புகலர் லோயர் nike **சா.பொ.6** ஆக ஏற்கனவே

குறியீடு செய்யப்பட்டுள்ளது. இரத்தக்கரை படிந்த டார்க் புளூ கலர் லோயர் **சா.பொ.5** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. -1 , இரத்தக்கரை படிந்த வெள்ளை ஊதா புளூ மஞ்சள் கலர் பூ போட்ட அரைக்கை சட்டை **சா.பொ.7** .ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.த.சா.16.**ஆகும். பின்னர் எதிரிகளுடன் 11.00**மணிக்கு** காவல்நிலையம் வந்து திரேக பரிசோதனை செய்து பாராவசம் ஒப்புவித்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பினேன். பின்னர் சாட்சிகள் சாந்திசீலா, நாகேந்திரன், பெரியசாமி, அழகர்சாமி, முனியம்மாள், சந்திரகுமார், ஜெகநாத், பழனிச்சாமி, கிருஷ்ணசந்திர பிரதான், வினோத்குமார், சிபு, ஆகியோர்களை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் சொத்துக்களை தலைமைகாவலர் ராமகிருஷ்ணன் என்பவர் மூலம் நீதிமன்றத்தின் உத்தரவு பெற்று மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த வேண்டு கோள் கடிதம் ஏற்கனவே **அ.த.சா.ஆ.11,ஆக** குறியீடு செய்யப்பட்டுள்ளது. அவர் வழங்கிய குருதிநீர் வடியியல் அறிக்கை **அ.த.சா.ஆ.17.(Serology report)** ஆகும். Visera report **அ.த.சா.அ.18.** ஆகும். உயிரியியல் அறிக்கை **அ.த.சா.ஆ.19.** ஆகும். அதன் பிறகு திண்டுக்கல் அரசு மருத்துவரான ரீனா ஜோஷ் மற்றும் பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் சுபாசினி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அறிக்கை பெற்றேன். மதுரை வட்டார தடய அறிவியல் அலுவலர் காஜாமைதினை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அறிக்கை பெற்றேன். 1வது எதிரி அனுபம் பௌரி, 2வது எதிரி மகாவீர் திபர் ஆகியோர்கள் மீது பிரிவு 302 இதச வின் படி 15.11.2022 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

சம்பவ இடமானது மூனான்டி கிராம எல்லைக்குட்பட்டது. மூனான்டி கிராம நிர்வாக அலுவலரை நான் விசாரிக்கவில்லை. மூனான்டிபட்டிக்கு என்று தனியாக கிராம நிர்வாக அலுவலர் கிடையாது. சம்பவம் நடந்த இடமடானது வேல்வார்கோட்டை ஊராட்சிக்குட்பட்ட கிராமம் ஆகும். மூனான்டிபட்டி கிராமத்தில் 250 லிருந்து 300பேர்கள் வசிக்கிறார்கள். மூனான்டிபட்டி கிராமம் திண்டுக்கல்– திருச்சி ரோட்டிலிருந்து எவ்வளவு தொலைவில் உள்ளது என்றால் 10மீட்டர் தான் இருக்கும். பொது மக்கள் குடியிருப்பு பகுதி சுமார் 50 லிருந்து 100 மீட்டர் தொலைவில் உள்ளது. அந்த பஸ்ஸ்டாப் அருகே எத்தனை கடைகள், எத்தனை வீடுகள் அமைந்துள்ளது என்றால் 4 பெட்டிக்கடைகள், 50 மீட்டர் தள்ளிதான் குடியிருப்புகள் உள்ளது. 4 பெட்டிக்கடைகள் யார் யார் நடத்தி வந்தார்கள் என்று தெரியாது. மூனான்டிபட்டியிலிருந்து வடமதுரை சுமார் 3 1/2 கிமீ தூரம் இருக்கும். மூனான்டிபட்டியிலிருந்து வடமதுரை செல்லும் வழியில் 2,3 மில்கள் அமைந்துள்ளது. காவேரி மில், மற்ற மில்களின் பெயர்கள் சரியாக தெரியவில்லை. பன்னாரி அம்மன் மில் எங்கு அமைந்துள்ளது என்றால் வேல்வார்கோட்டை பிரிவு அருகில் அமைந்துள்ளது. காவேரி மில் மற்றும் பன்னாரி மில் ஆகியவவை திண்டுக்கல் – திருச்சி ரோட்டில் எந்த திசையில் அமைந்துள்ளது என்றால் மேற்கு திசையில் அமைந்துள்ளது. காவேரி

மில்லுக்கும் பன்னாரி மில்லுக்கும் 21/2, 3 கிமீ தூரம் இருக்கும். மூனான்டிபட்டியிலிலுந்து வடமதுரையை நோக்கி வரவேண்டும் என்றால் முதலில் பன்னாரி மில் வரும் . அந்த பன்னாரி மில்லில் எப்போதும் காவலர்கள் இருப்பார்கள். அந்த மில் வாசலில் சிசிடி கேமரா பொருத்தப்பட்டு இருக்கும் என்றால் தெரியாது. இந்த வழக்கு தொடர்பாக நான் பன்னாரி மில்லை அணுகி அங்கு பணிபுரிந்த காவலர்களையோ, மற்றும் சிசிடிகேமரா கேட்டு விசாரிக்கவில்லை என்றால் சரிதான். காவேரி மில்லில் பணிபுரிந்த காவலர்களையோ, மற்றும் சிசிடி கேமரா கேட்டு விசாரிக்கவில்லை என்றால் அந்த மில் இயங்கவில்லை. அங்கு சிசிடி கேமரா பொருத்தப்பட்டுள்ளதா என்று விசாரித்தேனா என்றால் கடந்த 6,7 வருடங்களாக தொடர்ச்சியாக மில் மூடப்பட்டுள்ளது. மூனான்டிபட்டியிலிருந்து காவேரி மில்லானது ஒரு காம்பவுண்டு சுவரிலிருந்து 300 மீட்டர் இருக்கும். பிரேதம் கிடந்ததாக சொல்லப்படும் இடமானது யாருக்கு சொந்தமான இடம் என விசாரிக்கவில்லை. அதன் அருகே இருக்க கூடிய இடம் ஒருவருக்கு சொந்தமான இடமா அல்லது பல்வேறு நபர்களுக்கு சொந்தமான இடம் என விசாரித்தேனா என்றால் இல்லை. அந்த இடத்தின் உரிமையாளரை வழக்கின் சாட்சியாக சேர்க்கவில்லை. பிரேம் கிடந்ததாக சொல்லும் இடத்திலிருந்து வடமதுரை வரும் வழியில் தான் முத்தனங்கோட்டை கிராமம் உள்ளது என்றால் சரியல்ல. பிரேதம் கிடந்த இடத்திலிருந்து வடமதுரை வரும் வழியில் தான் முத்தனங்கோட்டை பிரிவும், பஸ்ஸ்டாப்பும் உள்ளது என்றால் மேற்கு பக்கத்தில் உள்ளது. எதிரிகள் இருவரும் மேற்கு வங்காளத்தை சேர்ந்தவர்கள் ஆவார்கள். அவர்கள் வங்காள மொழியும், ஹிந்தியும் பேசுவார்கள். இந்த வழக்கில் வங்காள மொழி பேசும் மொழி பெயர்ப்பாளரை விசாரித்தேனா என்றால் கிருஷ்ண சந்திர பிரதான், சிபு ஆகியோரை விசாரித்தேன். அவர்கள் எந்த ஆவணங்களை மொழிபெயர்த்து இந்த வழக்கு சம்மந்தமாக சொன்னார்களா என்றால் கிருஷ்ண சந்திர பிரதான் எதிரிகளை பன்னாரி மில்லில் வேலைக்கு சேர்த்தவர், எதிரிகளின் அடையாளத்திற்காக விசாரித்தேன். சிபு எதிரிகள் சண்டையிட்டதை நேரில் பார்த்தவர், அவர் அடையாளம் காட்டியதை வைத்து தான் எதிரிளை கைது செய்தேன். அவர்கள் இருவரிடமும் எந்த ஆவணமும் மொழி பெயர்க்க சொல்லவில்லை. எனக்கு 26.08.2022 அன்று காலை 10.00மணிக்கு தகவல் கிடைக்கப் பெற்றேன். 26.08.2022அன்று வழக்கு பதிவு செய்வதற்கு முன்பு இறந்தவர் பற்றி நிலையத்திற்கு எந்த புகாரும் வரவில்லை. எங்கள் காவல்நிலையத்திலிருந்து 24.08.2022 அன்று இரவு ரோந்து பணி மேற்கொள்ளப்பட்டதா என்றால் மேற்கொள்ளப்பட்டது. அந்த ரோந்து பணி எங்கள் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட மூனான்டிபட்டிக்கும் சென்றது. எங்கள் காவல் நிலையத்திலிருந்து முறையாக முறைக்காவல் செல்வது வழக்கந்தான். அந்த முறைக்காவலர்கள் மூனான்டிபட்டிக்கு சென்றார்களா என்றால் மூனான்டிபட்டிக்கு என்று தனியாக கிடையாது. பீட் பார்க்கும் நபர்கள் சென்று வருவார்கள். எந்த பீட்டில்

மூனான்டிபட்டி அமைந்துள்ளது என்று தெரியவில்லை. பொதுவாக பீட் போலிசாரின் பணி என்பது சட்டம் ஒழுங்கு பிரச்சனை குறித்தோ, குற்றச் சம்பவம் குறித்தோ காவல் நிலையத்திற்கு தெரிவிக்க வேண்டும் . இந்த வழக்கு தொடர்பாக பீட் போலிசார் 24.08.2022 அன்று மூனான்டிபட்டி பகுதியில் எந்த அசம்பாவிதமும் நடைபெற்றதாக தெரிவிக்கவில்லை. நெடுஞ்சாலை பகுதி என்பதால் நெடுஞ்சாலை காவல்துறையினர் அந்த இடங்களில் ரோந்து சென்று அசம்பாவிதங்களை நிலையத்திற்கு தெரியப்படுத்துவது வழக்கம்தான். ஆனால் அந்த தேதியில் எதுவும் நடந்ததாக சொல்லவில்லை. வாகன தணிக்கை எதுவும் அந்த தேதியில் நடைபெற்றதா என்றால் அந்த இடத்தில் செய்யவில்லை. வடமதுரை தென்னம்பட்டி நால்ரோடு பிரிவில் செய்தோம். திண்டுக்கல்லிலிருந்து வடமதுரை ரோட்டில் வரும்ரோட்டில் ரோந்து பணி செய்யவில்லை. எங்கள் காவல் நிலையத்திற்கு பிரேதம் கிடந்தது பற்றி எத்தனை மணிக்கு தகவல் வந்தது என்றால் சுமார் காலை 09.00மணிக்கு 26.08.2022 அன்று கிடைத்தது. யார் தகவல் கொடுத்தார்கள் என்றால் பீட் காவலருக்கு தகவல் யாராவது கொடுத்திருப்பார்கள். யார் தகவல் கொடுத்தார்கள் என்பது பற்றி நான் விசாரிக்கவில்லை. அவர்களை சாட்சியாக இந்த வழக்கில் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எத்தனை மணிக்கு தகவல் கிடைக்கப் பெற்று எத்தனை மணிக்கு சம்பவ இடத்திற்கு காவலர்கள் சென்றிருப்பார்கள் என்றால் சுமார் 09.00மணிக்கு சென்றிருப்பார்கள். அ.சா.1. காவல்நிலையம் வந்த போது என்னிடம் ஏதும் முறையிட்டாரா என்றால் குற்றவாளியை கண்டுபிடிக்குமாறு முறையிட்டாளர். 24.08.2022 லிருந்து 26.08.2022 வரை மூனான்டிபட்டி பிரிவிலிருந்து அசம்பாவித நிகழ்வுகளை ரோந்து பணி சென்ற காவலர்கள் நிலையத்திற்கு தெரியப்படுத்தினார்களா என்றால் முட்புதர் என்பதால் தெரியவில்லை. அ.த.சா.ஆ.12 வரைபடத்தில் பிரேதம் கிடந்த இடம் நெடுஞ்சாலையிலிருந்து சுமார் 100 மீட்டர் தொலைவில் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. பிரேதம் கிடந்த இடத்தின் அருகே மின் விளக்கு எதுவும் கிடையாது. அ.சா.1. இறந்து போன நபர் காணாமல் போனதாக 2 நாட்கள் கழித்து புகார் கொடுப்பதற்கு ஏதேனும் காரணம் சொன்னாரா என்றால் பொதுவாக கொத்தனார்வேலை செய்து விட்டு வந்து விடுவார் என நினைத்திருந்தோம் என சொன்னார். அவர் வேலை செய்யும் நபர்கள் வீட்டிற்கும், உறவினர் வீட்டிலும் தேடியதாக சொன்னார். குறிப்பாக எந்தெந்த வீட்டில் தேடியதாகவோ, எந்த உறவினர் வீட்டில் தேடியதாகவோ சொல்லவில்லை என்றால் சரிதான். இறந்து போன நபர் மதுகுடிக்கும் பழக்கம் உள்ளவர் என்றால் சரிதான். அவர் யார், யாருடன் சேர்ந்து மது குடிப்பார் என்ற விவரங்களை தெரிந்து கொள்ளவில்லை. அவர் யாரோடு கடைசியாக மது அருந்தினார் என்ற கோணத்தில் நான் விசாரிக்கவில்லை என்றாலும் அவர்ளை சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. கடைசியாக இறந்து போன மூனான்டிபட்டிக்கு சென்று வருவதாக அ.சா.1 யிடம் சொன்னதாக விசாரணையில்

தெரிந்து கொண்டேன். இறந்தவர் வேலையில்லாத நேரத்தில் யார்,யாருடன் சென்று பொழுது போக்கி வருவார் என நான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். அந்த கோணத்தில் நான் விசாரிக்கவில்லை என்றால் அவசியமில்லை என்பதால் விசாரிக்கவில்லை. நான் பிரேதம் கிடந்த இடத்திற்கு செல்லும் போது பொது மக்கள் இருந்தார்கள். இறந்த நபரின் குடும்பத்தினரும் இருந்தார்கள். மகஜரில் நான் சொல்லியுள்ள பொருட்களை தவிர வேறு எந்த பொருட்களும், தடயங்களும் அங்கு இல்லை என்றால் சரிதான். பிரேதத்தையும், பிரேதத்தின் மீதிருந்த உடைகளையும், அங்கிருந்ததாக சொல்லப்படும் கல்லின் மீதும் எந்த விதமான கைரேகையோ, மற்றும் தடய அறிவியல் ஆய்வாளரை வரவழைத்து சேகரித்தேனா கல்லை விசாரணைக்காக சேகரித்தேன் குறிப்பாக அறிவியல் ஆய்வாளரை அந்த இடத்திற்கு வரவழைக்கவில்லை . பொதுவாக குற்ற வழக்குகளில் மேற்படியான விசாரணையை மேற்கொள்ள வேண்டும் என்றால் தேவைக்கேற்ப பயன்படுத்துவது வழக்கம். பார்வைமகஜரை எனக்கு உதவியாக இருந்த சார்லஸ் எழுதினார். அவர் எழுதியதாகவும் சாட்சி கையெழுத்தும் போடவில்லை என்றால் சரிதான். அ.சா.1க்கு 24.08.2022 அன்று நாகேந்திரன் செல்போனில் பேசியதற்கான ஆதாரத்தை சேகரித்து இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நாகேந்திரன், பெரியசாமியிடம் பேசியதற்கான ஆதாரத்தை சேகரித்து இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நாகேந்திரனின் மகன்கள் யார், யார் ராம்குமாரை தேடி சென்றார்கள் என்பது குறித்து அவர்களை சாட்சியாக இவ்வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. பெரியசாமி வீடு எங்குள்ள என்று விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. பெரியசாமியின் போன் நம்பரை கேட்டு வாங்கவில்லை. சந்திரகுமாரி என்ற மொழி பெயர்ப்பாளரை வரவழைக்க வேண்டுகோள் கடிதம் கொடுக்கவில்லை. அன்றைய தினம் காவல் நிலையத்தில் வைத்து காவல் ஆய்வாளர் அறையில் வைத்து மொழி பெயர்த்தார். காவல்ஆய்வாளர் அறையில் யார் , யார் இருந்தார்கள் என்றால் சாட்சிகள் சந்திரகுமாரி, முத்துப்பாண்டி, ரகுவேல், எதிரிகள், மற்றும் நான் இருந்தேன். உதவிக்கு 2 காவலர்கள் இருந்தார்கள். அந்த காவலர்கள் யார் என்று நினைவில் இல்லை. 1ம் எதிரி கொடுத்ததாக சொல்லும் ஒப்புதல் வாக்குமூலத்தில ஹிந்தி மொழிபெயர்ப்பாளர் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். முத்துப்பாண்டி, ரகுவேல் மட்டும் கையெழுத்திட்டார்கள். பொதுவாக மொழி பெயர்ப்பாளரை பயன்படுத்தும் போது அந்த ஆவணத்தில் மொழிபெயர்ப்பாளர் கையொப்பம் பெறப்பட்டிருக்க வேண்டும் என்றால் அவசியம் இல்லாததால் வாங்கவில்லை. நான் சொல்வது முற்றிலும் பொய் என்றாலும் நானாக ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்ததால் தான் மொழிபெயர்ப்பாளரிடம் கையெழுத்து பெறவில்லை என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் யார் எழுதினார் என்றால் எனக்கு உதவியாக இருந்த சிறப்பு சார்பு ஆய்வாளர் சார்லஸ் எழுதினார். சார்லஸ்

எழுதியதாக அவரின் சாட்சி கையொப்பமோ, குறிப்போ இல்லை என்றால் சரிதான். பன்னாரி மில்லில் வேலை பார்த்த பழனிச்சாமி என்பவர் பன்னாரி மில் நிர்வாகம் தொடர்பாக எங்கள் காவல்நிலையத்திறகு வருவாரா என்றால் இல்லை. சம்பவம் நடந்த 2 மாதத்திற்கு முன்பிலிருந்துதான் நான் பணியாற்றினேன். பன்னாரி மில் நிர்வாகம் தொடர்பாக யார்,யார் காவல்நிலையம் வருவார்கள் என்பது பற்றி தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. அ.சா.4. பழனிச்சாமி காவல்நிலையத்திற்கு அடிக்கடி வருவார் என்பதால் நாங்கள் கேட்டுக் கொண்டற்கிணங்க அவர் எதிரி பற்றிய விவரங்களை சொன்னதாக சாட்சியம் அளித்துள்ளார்., அ.சா.6 சிபு பன்னாரி மில்லில் ஏற்கனவே பணிபுரிந்த தொழிலாளி என்றால் இல்லை . அவர் கடை வைத்துள்ளார். சம்பவ நாளில் எதிரிகளை சண்டையை விலக்கி விட்டு சண்டையை நேரில் பார்த்தவர் ஆவார். சண்டை குறித்து24,25 தேதிகளில் சிபு காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. சிபு முறைக்காவல் போலிசாரிடமோ, ரோந்து பணியில் ஈடுபட்ட போலிசாரிடமோ சிபு எந்த புகாரும் கொடுக்கவில்லை. அன்றைய தினம் எந்த விதமான சண்டையும் நடைபெறவில்லை என்றாலும் சிபு என்பவர் தடை செய்யப்பட்ட பாக்குகளை விற்பனை செய்வதால் அவர் போலிசாருக்கு பயந்து பொய்யாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்ட சா.பொ.3. இரத்தம்பட்ட கல்லின் அளவு , மற்றும் எடை பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். அத்தாட்சி 20.09.2022 அன்றுதான் நீதிமன்றத்திற்கு அனுப்பபட்டது என்றால் சரிதான். அ.சா.1 அளித்த புகாரில் சம்பவ இடத்தில் கல் எதுவும் கிடந்ததாக சொல்லவில்லை. பிரேதம் கிடந்த இடத்திற்கு போன போது பிரேதம் சிதைந்து புழுக்கள் இருந்ததா என்றால் இல்லை. அ.த.சா.ஆ.3. பார்வைமகஜர் 29.08.2022 அன்றுதான் நீதிமன்றத்திற்கு அனுப்பபட்டது என்றால் சரிதான். நான் பிரேதத்தை பார்க்கும் போது முகம் அடையாளம் தெரியாத அளவுக்கு இருந்ததா என்றால் அடையாளம் தெரியும் அளவுக்கு தான் இருந்தது. அ.த.சா.ஆ.9ல் உள்ள சாட்சி ரகுவேல் அ.சா.1ன் கணவர் என்றால் சரிதான். மற்றொரு கைப்பற்றுதல் மகஜர் சாட்சி முத்துப்பாண்டி ரகுவேலின் நண்பர்தான். அவர்கள் இருவரையும் நிலையம் வரவழைத்து நானாகவே எதிரிகளுக்கு எதிராக பொய்யாக ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சி, ஆகியவை தயார் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல்,சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரி ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் அளிக்கவில்லை என்றாலும் அதன் அடிப்படையில் எந்த வித பொருளும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் பிரேதத்தின் அருகே கிடந்ததாக சொல்லப்படும் கல் என்னால் இவ்வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் பிரேத விசாரணை எதுவும் மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளிடம் இருந்து கைப்பற்றியதாக சொல்லப்படும் உடைகளை நானாக வழக்கிற்காக தயார் செய்து கொண்டேன் என்றால்

சரியல்ல. இவ்வழக்கில் இறந்து போன நபர் மது அருந்து கொண்டு பல்வேறு நபர்களுடன் சண்டையிட்டு வந்த நபர் என்பதை நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. இறந்து போன நபர் இறந்தது பற்றி உண்மையான காரணத்தை அறியாமல் நானாகவே இரண்டு தினங்களுக்கு முன் சண்டை நடந்ததாக கூறி பொய்யான சாட்சிகளை உருவாக்கி இவ்வழக்கில் எவ்வித குற்றமும் செய்யாத எதிரிகளை இந்த வழக்கில் சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் கொலைச் சம்பவம் குறித்த கண்ணுற்ற சாட்சிகள் யாரும் இல்லை என்றால் நேரடி சாட்சிகள் இல்லை. சூழ்நிலை சாட்சிகளை விசாரித்துள்ளேன். மேற்படி சாட்சிகளை நானாக உற்பத்தி செய்தேன் என்றால் சரியல்ல. நான் சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் எதிரிகள் நிரபராதிகள் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் எதிரிகள் வடமாநிலத்தை சேர்ந்தவர்கள் என்றாலும் எதிரிகள் இறந்த நபருடன் எந்த முன்விரோதமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.12 20:59:14 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.